
# 2 தென்னாசிய வலய நாடுகளின் பண்புகள்

உலகம் பற்றிய தகவல்கள் வெளியான காலந்தொடக்கம் மனிதன் வாழ்ந்த பகுதியாக அமைந்த தென்னாசிய வலயத்திற்கு நீண்ட வரலாறு உண்டு. இந்து கங்கை சமவெளியில் அமைந்த மொஹஞ்சதாரோ, ஹரப்பா போன்ற மிக வளர்ச்சி அடைந்த நாகரிகங்களின் தாயகமாக விளங்குவதும் தென்னாசிய வலயமாகும்.

- ✸ வடக்கே - இமயமலைத்தொடர்
- ✸ தெற்கே - இந்து சமுத்திரம்
- ✸ மேற்கே - அராபிக் கடல்
- ✸ கிழக்கே - வங்காள விரிகுடா

என்பவற்றால் சூழப்பட்ட பிரதேசம் தென்னாசிய வலயம் எனப் பெயர் பெறுகிறது. தென்னாசிய வலயம் பற்றி மாணவர்களுக்கு விளக்குவதற்காக ஆசிரியர் நிறந்தீட்டப்பட்ட தென்னாசிய வலயம் கொண்ட தேசப்படத்தை வகுப்பறையில் காட்சிப்படுத்தினார்.

ஆசிரியர் : சுபன், இத்தேசப்படத்தில் அடைப்பினுள் உள்ள பிரதேசம் எது வெனக் கூறமுடியுமா?




**தேசப்படம் 2.1 தென்னாசிய வலயம்**

சுபன் : தென்னாசிய வலயம் ரீச்சர்.

ஆசிரியர் : மிகவும் நல்லது. இப்போது இத் தேசப்படத்தைப் பாருங்கள். பூரணி இத்தேசப்படத்தில் என்ன இருக்கிறது எனக் கூறுங்கள்.

பூரணி : தென்னாசிய வலய நாடுகளும் அவற்றின் தலைநகரங்களும் இப்படத்தில் குறிக்கப்பட்டுள்ளன.


- இலவச பாடநூல் விநியோகத்திற்காக -




தேசப்படம் 2.2 தென்னாசிய நாடுகள்

- இந்தியா - புதுடில்லி
- பங்களாதேஷ் - டாக்கா
- பாகிஸ்தான் - இஸ்லாமாபாத்
- நேபாளம் - காத்மண்டு
- பூட்டான் - திம்பு
- மாலைதீவு - மாலே
- இலங்கை - கொழும்பு

இந்த அலகில் தென்னாசிய வலய நாடுகளின் தனித்துவம், அவற்றின் பிரதான தரைத்தோற்றம், காலநிலை, இயற்கை வளம், கலாசார பாரம்பரியங்கள் என்பன பற்றிய விளக்கம் வழங்கப்பட்டுள்ளது.

## செயற்பாடு

1. உலகத் தேசப்படத்தில் தென்னாசிய வலயத்தை நிறந் தீட்டிக் காட்டுக.
2. தென்னாசிய வலயத் தேசப்படம் ஒன்றை வரைந்து அவ்வலயத்திற்கு உரிய நாடுகளை குறித்துப் பெயரிடுக.
3. அத்தேசப்படத்தில் இமய மலைத்தொடரை கபில நிறத்திலும் வங்களா விரிகுடா, அராபிக்கடல், இந்து சமுத்திரம் என்பவற்றை நீல நிறத்தினாலும் நிழற்றுக.

தென்னாசிய வலயம் பழைய நிலத்திணிவாகும். தென்னாசியாவில் பௌதிக, மானிட, பண்பாட்டு அம்சங்களில் உள்ள சிறப்பான தனித்துவப் பண்புகளால் ஏனைய உலக வலயங்களிலிருந்து அதனை வேறாக்கி இனங்காணக்கூடியதாக உள்ளது. இவ்வலயத்துக்குரிய இந்தியா, நேபாளம், பூட்டான், பாகிஸ்தான், பங்களாதேஷ் என்பன இந்திய உபகண்டத்திலும் மாலை தீவு, இலங்கை என்பன தீவுகளாகவும் விளங்குகின்றன.

இவ்வலயத்திற்கு மத்திய ஆசியாவின் ஸ்ரெப்பீஸ் புல்வெளியிலிருந்து ஆரியர்கள் புலம் பெயர்ந்துள்ளனர். அவர்கள் ஆப்கானிஸ்தான் ஊடாக போலான், கைபர் ஆகிய கணவாய்களைக் கடந்து இந்து - கங்கைச் சமவெளிகளுக்கு காலத்துக்குக் காலம் புலம் பெயர்ந்து குடியிருப்புக்களை அமைத்தனர். பிற்காலத்தில் இலங்கைக்கும் இந்த ஆரியர்களில் ஒரு பகுதியினர் வந்துள்ளனர்.



உரு 2.1 கைபர், போலன் கணவாய்

## செயற்பாடு

1. தென்னாசிய வலய நாடுகள் ஒவ்வொன்றிலும் காணப்படும் வெவ்வேறு இனங்கள், மொழிகள், சமயங்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய பக்கப்புரட்டி ஒன்றைத் தயாரிக்குக.


- இலவச பாடநூல் விநியோகத்திற்காக -




பௌத்த சமயம்



இந்து சமயம்



இஸ்லாம் சமயம்




கிறிஸ்தவ சமயம்

உரு 2.2 பல்வேறு சமயங்களின் குறியீடுகள்

பருவக்காற்று காலநிலைக்கு உரியதெனக் கூறப்படும் தென்னாசிய வலயத்தின் முக்கிய வாழ்வாதாரத் தொழில் விவசாயமாகும். அத்துடன் நெற் பயிர்ச்செய்கை முக்கிய இடம்வகிக்கிறது. விவசாயமானது சிறிய நிலப்பரப்பில் மனித உழைப்பைப் பெருமளவில் பயன்படுத்தியும் பாரம்பரிய முறைகளைப் பின்பற்றியும் தொழினுட்பங்களை குறைந்த அளவில் பயன்படுத்தியும் நடைபெறுவது இவ்வலய நாடுகளில் காணக்கூடிய அம்சங்களாகும்.

இவ்வலயங்களில் வறுமையும், அதிக சனத்தொகையும் காணப்படுதல் பொதுவான ஒரு பிரச்சினையாகும். கைத்தொழில் துறையில் இந்தியாவும் பாகிஸ்தானும் வலயத்திலுள்ள ஏனைய நாடுகளைவிட முன்னணியில் விளங்குகின்றன.

ஆசிரியர் : இந்நாடுகளின் பொருளாதார, சமூக, அரசியல் ஒத்துழைப்பிற்காக சார்க் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் இவை சார்க் நாடுகள் எனவும் பெயர் பெறுகின்றன. தேசப்படம் 2.3 இல் சார்க் நாடுகள் பற்றிய தகவல்கள் காணப்படுகின்றன. இவ்வலய நாடுகளின் சனத்தொகை, நிலப்பரப்பளவு பயன்படுத்தப்படும் பணவகை முதலியன பற்றிக் கீழே தரப்பட்டுள்ள தேசப்படத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.




**தேசப்படம் 2.3 சார்க் நாடுகள்.**

மூலம் - http://en.wikipedia.org/wiki/listofcovntriesbypopulation/

2007 ஆம் ஆண்டில் புதுடில்லியில் நடைபெற்ற சார்க் மாகாநாட்டில் ஆப்கானிஸ்தான் அவதானிப்பு மட்டத்தில் பங்குபற்றியது. 2008 ஆம் ஆண்டில் கொழும்பில் நடைபெற்ற சார்க் மகாநாட்டில் ஆப்கானிஸ்தான் அங்கத்துவ நாடாகப் பங்கு பற்றியது.

சார்க் அமைப்பு மூலம் எதிர்ப்பார்க்கப்படுவது தென்னாசிய நாட்டு மக்களின் நட்புறவு, நம்பிக்கை, புரிந்துணர்வு என்பவற்றை விருத்தி செய்வதற்கான பின்னணியை ஏற்படுத்துவதாகும். அத்துடன் வலய நாடுகளின் ஒத்துழைப்பை விருத்தி செய்தல், சமூகப் பொருளாதார விருத்திக்கான உத்திகளை ஏற்படுத்துதல் என்பனவும் இவ்வமைப்பின் நோக்கங்களாக உள்ளன.

## செயற்பாடு

பின்வரும் தகவல்களை உள்ளடக்கி அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| சார்க் நாடுகள் | ஆட்சியாளரின் பெயர் | நாட்டு தலைவரின் படம் | சனத்தொகை | சமயம் | கொடி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

## தென்னாசிய வலயத்தின் பௌதிக நிலத்தோற்றம்

தென்னாசிய வலயம் ஆசிய கண்டத்தின் ஏனைய நிலப் பகுதியிலிருந்து வடக்கே இமயமலைத் தொடரால் பிரிக்கப்பட்டிருப்பதை முன்னைய பாடத்தில் கற்றுள்ளீர்கள். இவ்வலயத்தின் முனைப்பான மிகப்பெரிய நிலத் திணிவாக இந்திய உபகண்டம் விளங்குகின்றது என்பதை இதற்கு முந்திய பாடத்தில் அறிந்திருப்பீர்கள்.



தேசப்படம் 2.4
தென்னாசியாவின் பௌதிக நிலத்தோற்றம்

ஆசியாவிலிருந்து தென் ஆசியாவைப் பிரிக்கும் எல்லையாக வடக்கேயுள்ள இமயமலைத் தொடர் விளங்குகிறது. இமாலயம், இந்துகுஷ், சுலைமான், காரக்கோரம் ஆகிய மலைத் தொடர்கள் இந்த எல்லைக்குள் அடங்குகின்றன. உலகின் மிகவும் உயரமான எவரெஸ்ட் மலையுச்சி இமயமலைத் தொடரிலேயே உள்ளது. இந்தியாவில் மேற்கு மலைத்தொடர் சத்புத்ர மலை கிழக்கு மலைத் தொடர், விந்திய மலைத் தொடர், ஆகியனவும் காணப்படுகின்றன. இவை இந்தியாவிலுள்ள ஏனைய மலைத் தொடர்களாகும். இவை அனைத்தையும் விட இமயமலை சிறந்து விளங்குகிறது. நேபாளம், பூட்டான் என்பன இமயமலைத் தொடரின் தெற்கு அடிவாரத்தில் அமைந்துள்ள நாடுகளாகும்.

உயரமான மலைகளைத் தவிர இவ்வலயத்தின் முனைப்பான இன்னொரு தரைத்தோற்ற அம்சம் இந்து கங்கைச் சமவெளியாகும். இந்தியாவின் இரு பெரும் நதிகளான சிந்து நதியும், கங்கை நதியும் இச்சமவெளிகளினூடாகப் பாய்கின்றன. உலகின் பெரிய கழிமுகம் (Delta) கங்கை நதி கடலோடு சங்கமிக்கும் இடத்தில் உள்ளது.

பங்களாதேஷில் உள்ள சுந்தர்பான்ஸ் சேற்று நிலமும் இங்கேயே உள்ளது. மேற்கு இந்திய மலைத்தொடர், கிழக்கு மலைத்தொடர் என்பனவற்றை எல்லையாகக்கொண்ட தக்கணபீட பூமி இன்னுமோர் தரைத்தோற்ற அம்சமாகும். இது எரிமலைக் குழம்பிலான பழைய நிலத் திணிவெனப் பெயர் பெற்றுள்ளது.

பின்வரும் அட்டவணையில் தென்னாசிய வலயத்தில் பெருமளவில் காணப்படும் தரைத்தோற்ற அம்சங்கள் காட்டப்பட்டுள்ளன.

**தென்னாசிய வலயத்தில் காணப்படும் தரைத்தோற்ற அம்சங்கள்**

| நாடு | மலைகள் | ஆறுகள் | சமவெளிகள் | பீடபூமிகள் |
|---|---|---|---|---|
| இந்தியா | இமாலயம், காரக்கோரம், மேற்குமலைத் தொடர், கிழக்குமலைத் தொடர், சத்புத்ர. | கங்கை நதி, இந்து, நர்மதா, தப்தி, காவேரி, துங்கபத்திரா, கிருஸ்ணா, கோதாவரி. | இந்து - கங்கை சமவெளி. | தக்கணபீட பூமி, சோட்டா - நாக்பூர், மல்வார். |
| பாகிஸ்தான் | சுலைமான், போவர் கிரிதார். | இந்து நதியும், அதன் கிளை நதிகளான சட்லஜ், ராவி, சேலம், சேனப். | இந்து சமவெளி, பஞ்சாப் சமவெளி. | பலுகிஸ்தான் பீடபூமி. |
| இலங்கை | பீதுருதாலகால, சிவனொளிபாத மலை, நமுனகுல, நக்கிள்ஸ், கிரிகல்பொத்தை, இறக்குவானை. | மகாவலி, களனி, களு கங்கை, வளவை கங்கை, நில்வள கங்கை, ஜின் கங்கை. | உள்ளக (அண்) சமவெளி, கரையோர சமவெளி. | ஹட்டன், கண்டி, வெலிமடை, மாவலத்தன்ன. |
| நேபாளம் | மகாலு, கஞ்சன் புங்கா, தவளகிரி, எவரஸ்ட், அன்னபூரணா, சீவலிக் மலை, | அருண், கர்னாலி. | காத்மண்டு. | ------ |
| பூட்டான் | கருங்குன்றுகள், புனாகா, குலாகன்கிர். | மானாஸ், தொங்சா, கூர், சண், கொஷி. | ------ | ------ |
| பங்களாதேஷ் | சித்தாகொங், றங்கமஹால். | பிரம்மபுத்திரா, பத்மா. | சுந்தர், பான்ஸ். | ------ |
| மாலைதீவு | 1.7 மீற்றர் உயரமான முருகைக்கற்பாறைகளின் தொகுதியைக் கொண்டுள்ளது. | | | |


அட்டவணை 2.1


- இலவச பாடநூல் விநியோகத்திற்காக -

## செயற்பாடு

பின்வரும் தென்னாசிய வலயத் தேசப்படத்தை உமது பயிற்சிப்புத்தகத்தில் பிரதிசெய்க.

1. அத்தேசப்படத்தில் இலக்கங்களால் குறிப்பிடப்பட்டுள்ள தரைத்தோற்ற அம்சங்களை தேசப்படப் புத்தகத்தைத் துணையாகக் கொண்டு இனங்கண்டு உரிய இடங்களில் அப்பெயர்களை எழுதுக.
2. இத்தரைத்தோற்ற அம்சங்களை மலைகள், ஆறுகள், பீடபூமிகள், சமவெளிகள், கணவாய்கள், தீவுகள் எனும் தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்துக.




தேசப்படம் 2.5

**பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A நிரலை B நிரலுடன் பொருத்துக.**

| A | B |
|---|---|
| நேபாளத்தின் உயரமான மலையுச்சி | தார் |
| வரண்ட பாலைவனம் | இமாலயம் |
| எரிமலைக்குழம்பு (லாவா) மண் | எவரஸ்ட் |
| தென்னாசியாவை பிரிக்கும் எல்லை | பங்களாதேஷ் |
| பரந்த கழிமுகம் | தக்கணப் பிரதேசம் |
| இந்து நதியின் கிளைநதி | பிரம்மபுத்திர |
| கங்கை நதியின் கிளைநதி | ஜீலம் |

## காலநிலை

தரம் 8 இலுள்ள மாணவர்களுக்குத் 'தென்னாசியாவின் காலநிலை' என்னும் தலைப்பில் ஒழுங்குபடுத்தப்பட்ட கணினி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினைப் பார்வையிடுவதற்கு வகுப்புக்குப் பொறுப்பான ஆசிரியர் சந்தர்ப்பம் வழங்கினார். அந்நிகழ்ச்சித்திட்டம் கீழே தரப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் காலநிலையைத் தீர்மானிக்கும் காரணிகளாக வெப்பநிலை, மழைவீழ்ச்சி என்பன அமைகின்றன. தென்னாசிய வலய காலநிலையானது பல்வகைமையைக் கொண்டதாகும். உலகில் அதிக மழைவீழ்ச்சியைப் பெறும் சீராப்பூஞ்சி போன்ற பிரதேசங்களைப் போல வரண்ட பிரதேசமான தக்கண பீட பூமி, அதிக பனியால் மூடப்பட்ட இமாலயப் பிரதேசம், அதிக வெப்பம் நிலவும் தார் பாலைவனம் என்பனவும் இவ்வலயத்தில் காணப்படுகின்றன.




உரு 2.3 இமாலயம்



உரு 2.4 பாலைவனம்


- இலவச பாடநூல் விநியோகத்திற்காக -

தென்னாசியா பல்வகைமைக்காலநிலை கொண்ட வலயமாகும். இவ்வலயத்தின் பல்வகைமைத் தன்மையைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகள் பற்றி ஆராய்வோம்.




**தேசப்படம் 2.6**


## இவ்வலயத்தின் முக்கிய காலநிலை வகைகள்.

1. அயன வலயப் பருவக்காற்றுக் காலநிலை.
2. அயன வலய வரண்ட காலநிலை.
3. இளஞ்சூடான மழைக் காலநிலை.
4. துந்திரா காலநிலை.

இக்காலநிலை வகைகள் நிலவும் பிரதேசங்களும் அவற்றின் இயல்புகளும் அட்டவணை 2.2 இல் காட்டப்பட்டுள்ளன.

| காலநிலை | பிரதேசம் | காலநிலை |
|---|---|---|
| அயன வலய பருவக்காற்று காலநிலை. | மேற்கிந்திய மலைத் தொடர், கிழக்கிந்திய மலைத்தொடர், தக்கிண பீடபூமி, இலங்கை, பங்களாதேஷ். | ✸ ஆண்டு முழுவதும் பரவலாக மழை. ✸ அதிக மழைவீழ்ச்சி. |
| அயனவலய வரண்ட காலநிலை. | பஞ்சாப் சமவெளி, மேற்கு இராஜஸ்தான், தார் பாலைவனம். | ✸ மழையை விட ஆவியாதல் அதிகம். ✸ குளிர்காலத்தில் மழை பெறப்படும். |
| இளஞ்சூடான மழைக் காலநிலை. | இந்து-கங்கை சமவெளி, சோட்டா நாக்பூர் பீடபூமி, தக்கண பீடபூமியின் வட பகுதி. | ✸ குளிர்கால வரட்சி. ✸ கோடைகால மழை. |
| துந்திரா காலநிலை. | இமாலயத்தின் 3000 மீற்றருக்கு மேற்பட்ட பிரதேசம். | ✸ குளிர்காலத்தில்பனி வீழ்ச்சி. ✸ குளிர் அதிகம். |

அட்டவணை 2.2




தேசப்படம் 2.7 தென்னாசிய வலயத்தின் பிரதான காலநிலை வலயங்கள்

**தென்னாசிய வலய காலநிலையில் உள்ள மூன்று முனைப்பான பருவகாலங்கள்.**



**குளிர் காலம்** (டிசம்பர்-பெப்ரவரி)

இந்தியா குறைந்த வெப்பத்தைப் பெறுதல் இப்பருவத்திலாகும்.



**வெப்ப காலம்**

(மார்ச் இறுதிமுதல் - மே இறுதி வரை)

அதிக வெப்பம் இக்காலத்தில் நிலவும். மத்தியகோட்டுக்கு அருகில் அமைந்திருப்பதாலும் சூரியனின் வடக்கு நோக்கிய அசைவினாலும் வெப்பம் அதிகரிக்கும்.



**மழைக்காலம்** (ஜுன்-டிசம்பர்)

பருவக்காற்று மழையை அதிகமாகப் பெறுவது இக்காலத்திலாகும். ஆசியாவில் சீராப்புஞ்சி நகரமே அதிக மழையைப் பெறும் இடமாகும்.

உரு 2.5 காலநிலைப் பருவங்கள்

கணினிக் காட்சியை இடையில் நிறுத்திய ஆசிரியர் மாணவர்களோடு கலந்துரையாடினார்.

ஆசிரியர் : பிள்ளைகளே, நீங்கள் இப்போது தென்னாசிய வலயம் என்பது பரந்த நிலப்பரப்பைக் கொண்டுள்ளது என்பதை விளங்கிக் கொண்டீர்கள். எனவே பல்வேறு காலநிலையுடன் பருவவேறுபாடுகளையும் இங்கு காணக்கூடியதாயுள்ளது.

| | | |
|---|---|---|
| உபேன் | : | ரீச்சர், இந்தியாவில் ஹரியானா போன்ற பிரதேசங்களில் கோடை காலத்தில் வரட்சியினால் மக்கள் இறப்பதுண்டு எனக் கேள்விப் பட்டிருக்கின்றேன். இது உண்மையா? |
| ஆசிரியர் | : | ஆமாம், சில வேளைகளில் வெப்பம் அதிகரிப்பதால் மனிதர் இறக்கின்றனர். |
| சாரிக் | : | பங்களாதேஷின் பலபகுதிகள் எப்போதும் வெள்ளத்தில் மூழ்குவது பற்றியும் கேள்விப்படுகிறோம் ரீச்சர். |
| ஆசிரியர் | : | ஆம், பங்களாதேஸ் வெள்ளத்தில் மூழ்கும் நாடேயாகும். இந்த அட்டவணையைப் பாருங்கள். ஒவ்வொரு நாட்டினதும் காலநிலை விளக்கமாகத் தரப்பட்டுள்ளது. இவ்வாறு கூறிய ஆசிரியர் மீண்டும் கணினிக் காட்சியொன்றின் மீது மாணவர்களின் கவனத்தைத் திருப்பினார். |

| | |
|---|---|
| **இந்தியா** | பல்வகைமை கொண்ட மழைவீழ்ச்சி. மழையைப்பெறாத இடங்கள் போல பனியால் மூடப்பட்ட இமாலயம் போன்ற பிரதேசங்களும் உள்ளன. தக்கிணப் பிரதேசம் 1200mm இற்கும் குறைவான மழைவீழ்ச்சியைப் பெறும் பிரதேசமாகும். |
| **மாலைதீவு** | மத்தியகோட்டுக்கு அண்மையில் அமைந்திருப்பதால் வெப்பம் அதிகம் உண்டு. தீவுகளாக இருப்பதால் சமுத்திரத்தின் செல்வாக்குக்கு உள்ளாகிறது. உயர் அகலாங்கு பிரதேசங்களில் பனிக்கட்டி உருகுவதால் சமுத்திர நீர்மட்டம் உயர்வடைதல் எதிர் காலத்தில் தீவுகளாக உள்ள நாடுகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாகும். |
| **நேபாளம்** | குளிரானதும், வரட்சியானதுமான காலநிலை காணப்படுகிறது. கடும் வரட்சிக் காலமும் உண்டு. மண்சரிவு, வெள்ளம், சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களும் ஏற்படுகின்றன. |
| **இலங்கை** | ஆண்டு முழுவதும் பரவலான மழைவீழ்ச்சி. வரட்சிக்காலம் குறைவு. மத்தியகோட்டுக்கு அண்மையில் இருப்பதால் அதிக வெப்பம் காணப்பட்ட போதும் சமுத்திரத்தின் செல்வாக்கினால் மட்டுப்படுத்தப்படுகிறது. |
| **பங்களாதேஷ்** | சமவெளி நிலமாக இருப்பதோடு ஆண்டு தோறும் வெள்ளப்பெருக்கினால் அழிவுறும் நாடாகும். |
| **பாகிஸ்தான்** | பாலைவனப் பிரதேசங்களில் வரண்ட காலநிலை நிலவுவதுடன் வடபகுதி பனியால் மூடப்பட்டுள்ளது. |
| **பூட்டான்** | இமயமலையின் தென் பகுதியில் அமைந்துள்ளதால் அதிக மழை வீழ்ச்சியைப் பெறுகின்றது. |

## செயற்பாடு

1. இந்தியாவின் காலநிலையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை?
2. A, B நிரல்களை பொருத்தமுற இணையுங்கள்.

| A | B |
|---|---|
| குளிர் காலம் | மார்ச் பிற்பகுதி முதல் - மே பிற்பகுதி வரை |
| வெப்ப காலம் | ஜுன் - டிசம்பர் |
| மழைக் காலம் | டிசம்பர் - பெப்ரவரி |

3. பின்வரும் பிரதேசங்களை தென்னாசிய தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுக.
   - இந்தியாவில் அதிக மழை பெறும் சீராப்பூஞ்சி
   - குறைவாக மழைபெறும் தார் பாலைவனம்
   - பருவக்காற்று மழை பெறும் பிரதேசம்
   - வரண்ட காலநிலை நிலவும் வலயம்
4. வெப்பமும், மழைவீழ்ச்சியும் அதிகமாக இருப்பின் ஏற்படக்கூடிய பல்வேறு தாக்கங்களை வெளிப்படுத்தும் ஆக்கமொன்றினை இலங்கையை ஆதாரமாகக் கொண்டு தயாரிக்குக.

## தென்னாசிய வலயத்தில் இயற்கை வளங்களின் பரம்பல்

இயற்கை வளங்களைப் பற்றிய பாடத்திற்கான தகவல்களைச் சேகரிப்பதற்காகப் பூரணி மாமாவிடம் சென்று தகவல்களைக் கேட்டறிந்தாள்.

பூரணி : மாமா தென்னாசியாவின் இயற்கை வளங்கள் பற்றிக் கூறுங்கள். ஒப்படை ஒன்று தயாரிக்க வேண்டும்.

மாமா : ஒப்படையில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள் யாவை?

பூரணி : நிலம், காட்டுவளம், கனியவளம், நீர்வளம் என்பன.

மாமா : இவைபற்றிய விபரங்கள் பிரதேச புவியியல் புத்தகத்தில் உள்ளன. தேவையான தகவல்களை வாசித்து அறிந்து கொள்ளலாம்.

பூரணி பிரதேச புவியியல் புத்தகத்தைப் படித்து தென்னாசிய வலயம் பற்றிய தகவல்களைக் குறித்துக் கொண்டாள்.

அடுத்தநாள் வகுப்பறைக்குச் சென்ற பூரணி தான் குறிப்பெடுத்துத் தயாரித்த தகவல் பத்திரத்தை ஆசிரியரிடம் காட்டி வகுப்பறையில் காட்சிப்படுத்தினர். தகவல் சேகரித்த பூரணியைப் பாராட்டிய ஆசிரியர் அத்தகவல்களை உள்ளடக்கி இயற்கை வளம் பற்றி மாணவர்களோடு கலந்துரையாடினார்.

**தென்னாசிய வலய நாடுகளின் பரப்பளவும், பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடிய பரப்பளவும்.**

| நாடுகள் | நிலப் பரப்பு (சதுரகிலோ மீற்றரில்) | பயிர் செய்கை பண்ணக்கூடிய நிலப்பரப்பு (%) |
|---|---|---|
| இந்தியா | 3,165,596 | 51.63 |
| பாகிஸ்தான் | 803,943 | 25.28 |
| பங்களாதேஷ் | 143,998 | 58.47 |
| நேபாளம் | 147,181 | 16.92 |
| இலங்கை | 65,610 | 29.20 |
| பூட்டான் | 47,000 | 2.73 |
| மாலைதீவு | 298 | 43.33 |

அட்டவணை 2.3

மூலம்:- http.//www.cia.gov/library/publications/the world-factbook - 15 July 2008


அட்டவணை 2.3 ற்கு ஏற்ப தென்னாசியாவின் நிலவளம் 4,373,626 சதுர கிலோ மீற்றராகும். நிலத்தின் அளவில் 18% பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படுகின்றது. அதில் 11% காட்டு வளமாக உள்ளது. அட்டவணை 2.3 இனைப் பாருங்கள்.

## செயற்பாடு

1. அட்டவணை 2.3 இலுள்ள தரவுகளின்படி பயிர்ச்செய்கை இடம்பெறும் நிலப்பரப்பினை அளவு கூடிய பெறுமானத்திலிருந்து குறைந்தளவு பெறுமானம்வரை ஒழுங்கு வரிசைப்படுத்துக.
2. நீர் பட்டியற்படுத்திய தரவுகளை நிரல் வரைபாக வரைந்துகாட்டுக.
3. பயிர்ச் செய்கை மேற்கொள்ளக்கூடிய நிலப்பரப்பு உச்ச அளவிலுள்ள நாடுகள் இரண்டினையும் குறைந்த அளவில் உள்ள நாடுகள் இரண்டினையும் குறிப்பிடுக.


- இலவச பாடநூல் விநியோகத்திற்காக -

## தென்னாசிய வலயத்தில் காடுகள் பரவியுள்ள விதம்





உரு 2.6 தென்னாசிய நாடுகளில் காடுகளின் பரம்பல்

இவ்வலயத்தின் காலநிலைக்கேற்பவே தாவரங்களின் கோலம் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது. காடுகளின் இயல்பைத் தீர்மானிப்பதில் மழைவீழ்ச்சி முக்கிய காரணியாக விளங்குகிறது. மழைக்காலத்தின் அளவு, வரட்சி நிலவும் காலம், வெப்ப வேறுபாடு எனும் காரணிகள் தாவர வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

### செயற்பாடு

1. தென்னாசிய வலய நாடுகளில் காடுகளின் இயல்பைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
2. உரு 2.6 னைப் பயன்படுத்தி கீறிட்ட இடங்களை நிரப்புக.
   தென்னாசிய நாடுகளிடையே அதிகளவில் காடுகள் பரவியிருக்கும் நாடு .................. ஆகும். அது நூற்றுக்கு .................................. ஆகும். ............................ குறைந்தளவு காட்டுப்பகுதியைக் கொண்டுள்ளது. இலங்கையில் காடுகளின் பரம்பல் ................................... ஆகும்.

## தென்னாசிய வலயத்தின் கனிய வளங்கள்




உரு 2.7 கனிய வளவகை





தேசப்படம் 2.8 தென்னாசிய நாடுகளின் கனியவளப்பரம்பல்

## செயற்பாடு

1. ஆசிரியரின் உதவியோடு தென்னாசிய நாடுகளில் நிலக்கரி, இரும்பு, சுண்ணக்கல் என்பன பரவியுள்ள இடங்கள் மும்மூன்றை தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுக.
2. நீங்கள் வரைந்த தேசப்படத்திற்கு விளக்கக்குறிப்பையும் தருக.
3. உரு. 2.7 இல் காட்டியதற்கிணங்க தென்னாசியாவில் அதிகஅளவு கனியவளம் பரவியுள்ள நாடு எது?

### நீர்வளம்

தென்னாசிய நாடுகள் நீரைப் பல வழிகளிலும் பெற்றுக் கொள்கின்றன. இதனைப் பின்வரும் உருவில் காணலாம்.




உரு 2.8 நீர் பெறும் வழிகள்

தென்னாசிய நாடுகளில் தக்கணப் பிரதேசம், பூட்டான், நேபாளம், பாகிஸ்தான் ஆகிய இடங்களில் மழைவீழ்ச்சிகுறைவானதினாலும், வரட்சிக்காலம் ஏற்படுவதாலும் நீர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. விவசாய நடவடிக்கைகள், நீர் மின் உற்பத்தி மற்றும் கைத்தொழில்கள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளுக்கும் நீர் மிகவும் பயனுள்ளதாகும்.

## செயற்பாடு

1. நீரினைப் பெற்றுக்கொள்ளும் பல்வேறு வழிகளைக் காட்டும் சுவரொட்டி ஒன்றைத் தயாரிக்குக.
2. நீரினால் பெறக்கூடிய பல்வேறு பயன்களையும் உள்ளடக்கும் விதத்தில் அறிக்கை ஒன்றை தயாரிக்குக.
3. தென்னாசிய வலய நீர்வளத்தைப் பாதுகாப்பதற்கு நீங்கள் முன்வைக்கும் ஆலோசனைகள் யாவை?
4. சமுத்திர வளம் மிக்க தென்னாசிய நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.



### மாணவர் ஆய்வு

ஆசிரியர் உதவியுடன் சமுத்திரத்தில் இருந்து பெறக்கூடிய பயன்கள் தொடர்பான தகவல்களை சேகரித்து கையேடு ஒன்றை தயாரிக்க.



உரு 2.9
மொங்கோலயிட் மனிதர்

தென்னாசிய வலயம் பல்வேறு இனமக்கள் வாழும் சனத்தொகை மிக்க வலயமாகும். இவ்வலயத்தின் மரபுக்குரிய மனித இனமான கொக்கோசோயிட் இனத்தவர் இங்கு வாழ்கின்றனர். எனினும் நேபாளம், பூட்டான் போன்ற நாடுகளின் மக்கள் மொங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். பாகிஸ்தான், வடஇந்தியா ஆகிய பிரதேசங்களில் வெள்ளை நிறமான, மிக உயரமான உடல் கொண்ட மக்கள் பெருமளவில் வாழ்கின்றனர். இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் மென்கறுப்பு நிறத்தைக் கொண்ட மக்கள் வாழ்கின்றனர். இவ்வலயத்தில் வாழும் மக்களைக் காட்டும் படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றை அவதானித்து இவ்வலயத்தின் மக்களை அறிந்து கொள்ளுங்கள்.





உரு 2.10 தென்னாசியாவின் சமூகம்


- இலவச பாடநூல் விநியோகத்திற்காக -

இவ்வலயத்தில் பல்வேறு இனமக்கள் வாழ்கின்றனர். இம்மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசுவதோடு பல்வேறு சமயங்களையும் பின்பற்றுகின்றனர். பின்வரும் அட்டவணை இதனை எடுத்துக் காட்டுகிறது.

| நாடு | இனம் | மொழி | சமயம் |
|---|---|---|---|
| இலங்கை | சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர், ஏனையோர். | சிங்களம், தமிழ், ஆங்கிலம். | பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம். |
| இந்தியா | இந்து ஆரியர், திராவிடர், ஏனையோர். | இந்தி, ஆங்கிலம் தமிழ், வங்காளம், தெலுங்கு, மராட்டி, குஜராத்தி, மலையாளம் போன்ற14 மொழிகள். | இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம், சீக்கியம். |
| பாகிஸ்தான் | பஞ்சாபியர், சிந்தி, புஸ்துன், உருது, பலோசி. | உருது, ஆங்கிலம், பஞ்சாபி, சிந்தி, பலோசி. | இஸ்லாம், இந்து, கிறிஸ்தவம். |
| பூட்டான் | மொங்கோலியர். | அரிடி, சொன்கோ, குரு, அஸம். | பௌத்தம், இந்து, ஏனையவை. |
| நேபாளம் | நேபாளி. | நேபாளி, மைதாலி, நேவாரி, பொஸ்பூரி. | பௌத்தம், இந்து, இஸ்லாம். |
| பங்களாதேஷ் | வங்காளி. | வங்காளி, உருது. | இஸ்லாம், பௌத்தம், இந்து, கிறிஸ்தவம். |
| மாலைதீவு | மலே, சிங்களவர், தமிழர். | திவெஹி, ஆங்கிலம். | இஸ்லாம், பௌத்தம். |

அட்டவணை 2.4

இத்தகவல்களுக்கேற்ப தென்னாசிய நாடுகள் பல்லின சமூகங்களைக் கொண்டிருப்பதைக் காணலாம். இந்தியாவில் மட்டும் துணை மொழிகள் 1000 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் உள்ளன. பழங்குடிகள் 300 வரை வாழ்கின்றனர். இதைத்தவிர தென்னாசிய வலயத்தில் ஆதிவாசிகள் கூட்டத்தினரும் வாழ்கின்றனர்.




**தேசப்படம் - 2.9 பிரதான மொழிகள்**


## செயற்பாடு

1. தென்னாசிய நாடுகளில் அதிக எண்ணிக்கையானோர் பின்பற்றும் மூன்று சமயங்களையும் அதிக எண்ணிக்கையினர் பயன்படுத்தும் மூன்று மொழிகளையும் குறிப்பிடுக.

2. பொருத்துக.

| நாடு | இனங்கள் |
|---|---|
| இலங்கை | நேபாளி |
| இந்தியா | இந்து ஆரியர் |
| பாகிஸ்தான் | சிங்களவர் |
| பங்களாதேஷ் | மலே |
| நேபாளம் | வங்காளி |
| மாலைதீவு | மொங்கோலியர் |
| பூட்டான் | பஞ்சாபியர் |


- இலவச பாடநூல் விநியோகத்திற்காக -





**உரு 2.11 - தென்னாசிய வலயத்தின் ஆதிவாசிகள்**

## செயற்பாடு


1. தென்னாசிய வலய நாடுகள் ஒவ்வொன்றிலும் வாழும் ஆதிவாசிகளின் கையேடு ஒன்றை தயாரிக்குக.
3. தென்னாசிய வலயத்தில் பல்கலாசார சமூகம் காணப்படுகின்றமைக்கான காரணங்கள் இரண்டினை விளக்குக.

## கலாசார பாரம்பரியம்

மொஹஞ்சதாரோ, ஹரப்பா போன்ற உலகத்தின் புராதன வளர்ச்சியடைந்த நாகரிகங்களுக்கு உரித்துடைய இவ்வலயம் இனம், மதம் சார்பான சிறப்பான கலாசார பாரம்பரியங்களையும் பல்வகைத்தன்மைகளையும் கொண்டுள்ளது. முற்காலந் தொட்டு மக்கள் பாரம்பரியமாக பின்பற்றும் பழக்கவழக்கங்கள், கலைநுட்பங்கள், பாரம்பரியங்கள் என்பனவற்றை கலாசார பாரம்பரியங்கள் என அழைக்கலாம். இப்பாரம்பரியங்கள் இரண்டு முக்கிய பகுதிகளைக் கொண்டவை.



| தொட்டுணரக் கூடியவை | தொட்டுணர முடியாதவை |
|---|---|
| குளங்கள் | இசை *(கீழைத்தேய, மேலைத்தேய.)* |
| விகாரைகள் | நடனம் *(பரதம், கதகளி, கண்டி, தாழ்நிலம்.)* |
| ஆலயங்கள் | மொழி *(இந்தி, தமிழ், சிங்களம்.)* |
| செதுக்கல்கள் | சமயம் *(இந்து, இஸ்லாம், பௌத்தம்.)* |
| கலைநுட்பங்கள் | மருத்துவமுறை *(யூனானி, ஆயுர்வேதம்.)* |



இத்தகைய பல்வேறு கலாசார பாரம்பரியங்கள் நிறைந்த இவ்வலயத்தில் உலக கலாசார பாரம்பரியங்கள் பலவும் காணப்படுகின்றன. யுனெஸ்கோ நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட உலக கலாசாரப் பாரம்பரியமாக இந்தியாவின் தாஜ்மஹால் இலங்கையின் சீகிரியா என்பன விளங்குகின்றன. இவ்வலயம் முழுவதும் பரவியுள்ள கலாசாரப் பெறுமானம் மிக்க இடங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.



சீகிரியா



தலதா மாளிகை



சமாதிநிலைப் புத்தர்




அஜந்தா ஓவியம்



செங்கோட்டை



தாஜ்மஹால்



சாஞ்சிக் கோபுரம்



அசோகனின் கற்றூண்



சாரநாத்



தஞ்சைப்பெரிய கோயில்



அன்னை வேளாங்கண்ணி தேவாலயம்



முத்துப்பள்ளி வாசல்

உரு 2.12

## செயற்பாடு

மேலே தரப்பட்டுள்ள படங்களில் காட்டப்பட்டுள்ள இடங்கள் அமைந்துள்ள நாடுகளின் பெயர் குறிப்பிட்டு அவற்றின் கலாசார முக்கியத்துவத்தை இரண்டு விடயங்கள் மூலம் விளக்குக.



## மாணவர் ஆய்வு

ஆசிரியரின் உதவியுடன் தென்னாசிய வலயத்திலுள்ள ஒவ்வொரு நாட்டிற்கும் உரிய கலாசார பாரம்பரியங்களை அறிந்து கையேடு ஒன்றைத் தயாரிக்குக.


## மனித நடவடிக்கைகள்

தென்னாசிய வலயத்தின் மனித நடவடிக்கைகளை பொருளாதாரம், சமூகம், அரசியல் என்னும் பிரிவுகளின் கீழே அவதானிக்கலாம். இவ்வலயத்தில் மாலைதீவு தவிர ஏனைய நாடுகளின் முக்கிய பொருளாதார நடவடிக்கை விவசாயமாகும். விவசாயமானது வர்த்தக விவசாயம், நுகர்வு விவசாயம் என இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. வர்த்தக விவசாயமாக பயிர்செய்யப்படும் பயிர்கள் விவசாய மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுவனவாகும். நாடுகள் ஒவ்வொன்றிலும் நுகர்வு விவசாயம், வர்த்தக விவசாயம் என்பவற்றில் பயிர் செய்யப்படும் பயிர்கள் பற்றிப் பின்வரும் வரிப்படம் மூலம் அறிந்து கொள்ளுங்கள்.

**விவசாயம்**

**நுகர்வு விவசாயம்**
- நெல்
- சோளம்
- தினை (சிறுதானியம்)
- காய்கறிகள்
- பழங்கள்

**வர்த்தக விவசாயம்**
- தேயிலை
- தெங்கு
- இறப்பர்
- கரும்பு
- பருத்தி
- சணல்




உரு 2.13 தென்னாசிய நாடுகளின் பயிர்ச்செய்கை




**தேசப்படம் 2.10 பயிர்ச்செய்கைப் பரம்பல்**

## செயற்பாடு

தென்னாசிய வலயத் தேசப்படத்தில்

1. நெல், பருத்தி, சணல், தேயிலை என்பன பயிர் செய்யப்படும் பிரதேசங்களை இவ்விரண்டு வீதம் குறித்துப் பெயரிடுக.
2. வர்த்தக விவசாயத்தின் கீழ் பயிர்செய்யப்படும் பயிர்வகைகளைக் குறிப்பிட்டு இப்பயிர்ச்செய்கையை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு கைத்தொழில்களை இனங்கண்டு எழுதுக.
3. தென்னாசிய வலய நாடுகளில் நுகர்வு விவசாயத்தை விருத்தி செய்வதால் பெறக்கூடிய நன்மைகளை எழுதுக.

**இவ்வலயத்தின் நுகர்வு விவசாயத்தில் காணப்படும் தனித்துவமான அம்சங்கள்.**

1. பாரம்பரிய நிலமுறை நிலவுதல்.
2. சிறு காணித்துண்டுகளானதால் குறைவான அறுவடை.
3. காணிகள் பிரிக்கப்படுதல்.
4. விவசாயிகளின் வறுமை அதிகரித்தல்.
5. குடும்ப உழைப்பு அதிகம் பயன்படுத்தப்படுதல்.
6. பசளையைப் பயன்படுத்தல் குறைவடைதல்.
7. தொழினுட்ப முறைகள் இழிவளவில் பயன்படுத்தப்படுதல்.
8. பாரம்பரிய முறையில் விவசாய நடவடிக்கைகள் இடம்பெறுதல்.

**வர்த்தக விவசாயத்தின் முனைப்பான அம்சங்கள்**

1. பாரிய விவசாயப் பண்ணைகள்.
2. பசளைகள் பயன்படுத்தல் அதிகரிப்பு.
3. நவீன தொழினுட்பங்களைப் பயன்படுத்துதல்.
4. உழைப்பு அதிக அளவில் பயன்படுத்தப்படுதல். (தேயிலை, இறப்பர் முதலிய பயிர்ச் செய்கைகளில்)

## விலங்கு வேளாண்மை

கால்நடை வளர்ப்பும் விவசாயத்தின் ஒரு பிரிவாகும். இதன்கீழே மாடுகள், ஆடுகள், செம்மறியாடுகள், கோழிகள் என்பன வளர்க்கப்படுகின்றன.

**மாடுகள்**



- ❋ பசளை
- ❋ பொதிசுமத்தல்
- ❋ பால்
- ❋ இறைச்சி
- ❋ தோல்
- ❋ உழவு

**செம்மறியாடுகள்**



- ❋ கம்பளி
- ❋ இறைச்சி
- ❋ தோல்

**கோழி**



- ❋ இறைச்சி
- ❋ முட்டை
- ❋ பசளை

**ஆடுகள்**



- ❋ இறைச்சி
- ❋ பால்
- ❋ பசளை

**பன்றி**



- ❋ இறைச்சி

உரு 2.14 பல்வேறு தேவைகளின் பொருட்டு வளர்க்கப்படும் விலங்குகள்

சில நாடுகளில் வர்த்தக நோக்கிலான கால்நடைவளர்ப்பும் இடம்பெறுகிறது.

உ-ம்:- இலங்கை - நுவரெலியா மாவட்டம் - அம்பேவெல (மாடு வளர்ப்பு)
இந்தியா - அசாம், பஞ்சாப் பிரதேசம்.


- இலவச பாடநூல் விநியோகத்திற்காக -

## செயற்பாடு

1. உரு 2.14 இனை அவதானித்து பின்வரும் அட்டவணையை நிரப்புக. வளர்க்கப்படும் விலங்குகளும் தேவைகளும்.

| இறைச்சி | பால் | கம்பளி | பசளை |
|---|---|---|---|
| | | | |

## மாணவர் ஆய்வு

1. இலங்கையின் தேசியபால் உற்பத்தியை விருத்தி செய்வதற்கு அரசினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?
2. இறக்குமதி செய்யப்படும் பால் உணவுப்பொருட்களைப் பெறுவதற்கு ஒதுக்கப்படும் அந்நியச் செலாவணியை மீதப்படுத்த உங்களால் முன்வைக்கக்கூடிய ஆலோசனைகளை எழுதுக.

## உற்பத்திக் கைத்தொழில்




உரு 2.15 தென்னாசிய வலயத்தின் கைத்தொழில்கள்

இந்தப் படத்தில் பல்வேறு கைத்தொழில்கள் காட்டப்பட்டுள்ளன. இவை நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. தென்னாசிய வலயம் கைத்தொழில் மயமாவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் வலயம் எனப்படுகிறது.

இந்தியா இவ்வலயத்தின் முக்கிய கைத்தொழில் நாடாகும். இதைத்தவிர பாகிஸ்தான், இலங்கை என்பனவும் கைத்தொழில் துறைக்கு முக்கியஇடம் வழங்கியுள்ளன. தென்னாசிய வலய நாடுகளில் பரவியுள்ள கைத்தொழில் வகைகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

## தென்னாசிய வலய உற்பத்திக் கைத்தொழில்

| நாடு | கைத்தொழில் |
|---|---|
| இலங்கை | ஆடை, பீங்கான், சீமெந்து, அலங்காரப் பொருள்கள், சிற்றுண்டி வகைகள், சீனி, தோல் பொருட்கள், இரத்தினக் கற்கள். |
| இந்தியா | மோட்டார் வாகனம், மோட்டார் சைக்கிள், துணி வகைகள், இரும்பு உருக்கு, மின் உபகரணம், கணினி, பிளாஸ்ரிக். |
| பாகிஸ்தான் | ஆடைகள், மின்உபகரணங்கள், இரும்பு உருக்கு, தோல் பொருட்கள். |
| பங்களாதேஷ் | ஆடைகள், தோல் பொருட்கள். |
| நேபாளம் | துணிவகை, கம்பளம். |
| பூட்டான் | கைவினைப் பொருட்கள், மரப் பொருட்கள். |
| மாலைதீவு | மீன்பிடி உற்பத்தி, தெங்குசார் கைத்தொழில். |

அட்டவணை 2.5

### சுற்றுலாப் பயணக்கைத்தொழில்

இவ்வலயத்தின் எல்லா நாடுகளிலும் சுற்றுலாக் கைத்தொழில் விருத்தி பெற்றுக் காணப்படுகிறது. இயற்கையழகு மிக்க சுற்றாடல் கொண்ட இடங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள், காடுகள், காட்டு விலங்குகள், உலகப் பாரம்பரியம் எனப் பல்வேறுபட்ட சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் பல இடங்களை இந்நாடுகள் கொண்டுள்ளன. மாலைதீவின் முக்கிய பொருளாதார நடவடிக்கையாக சுற்றுலாக் கைத்தொழில் விளங்குகிறது. நாடுநாடாகப் பயணம் செய்யும் போது கடற்கரைக் காட்சிகள் காட்டு விலங்குகளைப் பார்வையிடுதல், யாத்திரை, களியாட்டப் பயணம், அறிவைப் பெறுதல் என்பவற்றுக்கு சந்தர்ப்பம் கிட்டுகிறது. வெளிநாட்டுச் செலவாணியுடன் வேலை வசதிகள் பெறும் வாய்ப்புக்களும் ஏற்படுகின்றன.



உரு 2.16 உல்லாசப் பயணிகளின் மனங்கவர் இடங்கள்

## செயற்பாடு

இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் சுற்றுலா செயற்பாடுகளுக்குப் பிரசித்தி பெற்ற பத்து இடங்களைக் குறிப்பிடுக. இவற்றுள் விரும்பிய ஐந்து இடங்கள் பற்றிய அறிக்கை ஒன்றைத் தயாரிக்குக.

## அரசியல், சமூகப் பின்னணி

அரசியல் துறையை நோக்குவோமானால் இவ்வலய நாடுகளில் ஜனநாயக முறையிலான ஆட்சி இடம்பெறுகிறது. நீண்டகாலம் குடியேற்ற நாடாக இருந்தமையினால் அபிவிருத்தி அடைந்துவரும் பண்புகளை வெளிப்படுத்துகின்றன. இவ்வலயத்தில் நாட்டு எல்லைகளுக்கான பிரச்சினை பெருமளவு இருப்பதுடன் பயங்கரவாத பிரச்சினையையும் எல்லா நாடுகளிலும் காணக்கூடியதாயுள்ளது.

தென்னாசியா உலகில் சனத்தொகை அதிகளவிலுள்ள வலயமாகும். கிராமமக்களே பெருமளவினராவார். இவ்வலயத்தில் பாரம்பரிய சமூக பண்புகளைக் காணக்கூடியதாக உள்ளது. கூட்டுக்குடும்ப முறை சிறப்பம்சமாகும். இந்தியாவில் ஒரு வீட்டில் பல குடும்பங்கள் வாழும் கூட்டுக்குடும்ப முறையைக் காணலாம். பாரம்பரிய பழக்கவழக்கங்களை மதிப்பதுடன் விருந்தினர்களை வரவேற்று உபசரிப்பதிலும் இவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்

## செயற்பாடு

1. வானொலி, தொலைக்காட்சி, செய்திப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றைத் துணையாகக் கொண்டு தென்னாசிய வலயநாடுகளில் நிலவும் பிரச்சினைகள் பற்றி தகவல் பத்திரம் ஒன்றை தயாரிக்குக.
2. இவ்வாறான பிரச்சினைகள் தோன்றுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை?
3. வலயம் என்ற ரீதியில் இப்பிரச்சினைகளத் தவிர்ப்பதற்கு எடுக்கக் கூடிய நடவடிக்கைகளை குறிப்பிடுக.
4. பின்வரும் அட்டவணையிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி,
   * ஐந்து நாடுகளின் பெயர்கள்.
   * ஐந்து ஆறுகளின் பெயர்கள்.
   * ஐந்து மலைகளின் பெயர்கள்.
   * ஐந்து மொழிகளின் பெயர்கள்.
   * ஐந்து நகரங்களின் பெயர்கள்.

   என்பவற்றைக் கண்டுபிடித்து அடையாளம் இடுங்கள்.
   உ- ம்:- இந்தியா.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ | சி | உ | மா | லை | தீ | வு | இ | து | அ | ப் | இ |
| ந் | ங் | ரு | ப | ம | ஒ | ப | ந் | கை | ம் | க் | ல |
| தி | க | து | ஐ | மா | பி | ந் | ங் | பி | ம் | ற் | ங் |
| யா | ள | ம் | பா | லே | சா | க | ழ் | ர | வ் | ப் | கை |
| ம் | லா | மா | ய் | டா | க் | கா | ப் | ம | தி | ம் | பு |
| வா | ஸ் | பா | நே | பா | ள | ம் | க் | பு | கா | வே | ரி |
| இ | ப் | த் | ல் | ர் | ந் | தி | இ | த் | த | மி | ழ் |
| ம | கா | வ | லி | இ | ப் | ட | மா | தி | கே | ல் | கா |
| இ | ந் | து | கு | ஷ் | ன் | ப் | ல | ரா | கா | ழ் | த் |
| த | வ | ள | ல் | டா | க் | லை | ய | ம் | மா | கே | ம |
| கி | ரி | மே | ட் | ம | லை | யா | ள | ம் | அ | ள் | ண் |
| இ | ப் | பூ | சு | லை | மா | ன் | கே | ந | கி | ஸ் | டு |